# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2086 - 2018 අගෝස්තු මස 24 වැනි සිකුරාදා - 2018.08.24

*2086 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1746* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1750* |


***கவனிக்க.-*** *இலங்கை மின்சாரம் (திருத்தம்) சட்டமூலம் 2018, ஓகத்து மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*1743-B 81442-5,403 (2018/08)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## விஞ்ஞான, தொழில்நுட்பவியில், ஆராய்ச்சி, திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழில்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு

நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆதர் சீ கிளாக் நிறுவகம்

**பணிப்பாளர் நாயகம் (பிரதான நிறைவேற்று அலுவலர் ) பதவி**

*விஞ்ஞான, தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி, திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழில்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் அகப்பாட்டெல்லைக்குள் தொழிற்படும் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆதர் சீ கிளாக் நிறுவகம் ஒரு நியதிச்சட்ட சபையாகும். நிறுவனமானது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, பயிற்சிகள் வழங்கப்படல் மற்றும் தொழில்நுட்பவியல் என்பன வற்றினூடாக மின்னணுவியல், தொடர்பாடல், தகவல் தொழில்நுட்பம், மனித எந்திரவியல் மற்றும் விண்வெளி தொழில்நுட்பங்கள் ஆகிய துறைகளில் நவீன தொழில்நுட்பவியலை அறிமுகப்படுத்துவதுடன் அச்செயற்பாடுகளினை விரைவுபடுத்துதலினையும் தனது பணிப்பாணையாக கொண்டுள்ளது.*

*நிறுவனமானது, பொருத்தமான தகைமை, அனுபவம் மற்றும் விரைவாக செயலாற்றக்கூடிய தொழில்சார்பியலாளராக இருக்க கூடிய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்களுக்கு அழைப்பு விடுப்பதுடன் அவர் தொடர்பாடல், தலைமைத்துவம், சமூகத்துடனான தொடர்புகள் மற்றும் அமைப்பாண்மை திறன் ஆகியவற்றில் மிகச் சிறந்தவராகவும் இருத்தல் வேண்டும்.*

**தொழில் பெறுநரின் வகுதி** : *சிரேட்ட முகாமையாளர்*

*இவ்வகுதியினை சார்ந்த தொழில் பெறுநருக்கு குறித்தொதுக்கீடு செய்யப்படும் செயற்பாட்டின் தன்மை தொடர்பில் சபையினது வரைவிலக்கணம்.*

*இந்தப் பணிப்பாளர் நாயகமே நிறுவனத்தின் உயர் மட்டத்து நிறைவேற்று அதிகாரி ஆவார்.*

*இந்தப் பணிப்பாளர் நாயகம், நிறுவகத்தின் சகல நடவடிக்கைகள் பற்றிய பொறுப்பினை உடையவர் ஆவார். சபை பணிப்பாளர்களின் நேரடி நெறிப்படுத்துகை மற்றும் கட்டுப்பாடு என்பனவற்றின் கீழ் அடங்கும் நிதியியல் விவகாரங்களை நிர்வகிப்பவராகவும் சபையினால் அதிகாரங்கள் ஒப்படைக்கப்படுமிடத்து சபையினது அந்த அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளை செயற்படுத்துகை மற்றும் செயலாற்றுகை செய்வதோடு அக்கடமையினை நிறைவேற்றுபவராகவும் இருப்பார் என்பதுடன் நிறுவனத்தின் இலக்குகளை சாதிப்பதற்கும் மற்றும் தொழில்நுட்பவியல் மாற்றீடுகளை பிறப்பிப்பதற்கும் தேவைப்படக்கூடிய தலைமைத்துவம் மற்றும் ஊக்குவிப்பினை நிறுவகத்தின் பதவியணியினருக்கு வழங்குபவராகவும் இருப்பார்.*

இப்பதவிக்கான பிரதான கடமைகள் :

- *நிறுவகத்தின் சகல நிர்வாக மற்றும் நிதியியல் விவகாரங்களை கட்டுப்படுத்தல்;*
- *வருமானத்தினை அதிகப்படுத்தும் வகையில் உற்பத்தியினை மேன்படுத்துவதற்கு திட்டங்களை முறைவடிவமாக்கம் செய்தலும் நடவடிக்கைகளை நெறிப்படுத்தலும்;*
- *கொள்கை தொடர்பான விடயங்களில் சபைக்கு ஆலோசனை வழங்கல்;*
- *சம்பந்தப்பட்ட முகவராண்மைகளுடன் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் கூட்டிணைத்தல்;*
- *சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களினது சபை கூட்டங்களில் கலந்து கொள்ளல்;*
- *சர்வதேச முகவராண்மைகளுடன் தொடர்புடைய பணிகளினை செய்தல்;*
- *உள்ளூர் மற்றும் சர்வதேச மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் போன்ற இதர பலவற்றில் கலந்து கொள்ளல்;*
- *அறிக்கைகள் மற்றும் பிரசுரிப்புக்களை தயாரித்தல்;*
- *ஆளுநர் சபையினால் குறித்தொதுக்கீடு செய்யப்படும் வேறு நடவடிக்கைகள்;*

***நியமனத்தின் தன்மை*** *.- ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகியவற்றை உரித்தாக கொண்ட இப்பதவி நிரந்தரமானதாகும். (1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 27 (2) மற்றும் 27 (4) ஆம் பிரிவிற்கு அமைவாக ஐந்து வருட காலத்திற்கு)*

*இத்தொழில் பெறுநர் வகுதிக்குரிய சம்பள குறியீடு மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் (முகாமைத்துவ திணைக்கள சேவையின் 02/ 2016 என்னும் இலக்கத்தை கொண்ட சுற்றறிக்கையானது 2020.01.01 இலிருந்து செல்லுபடியாகும் வகையில் பூரணமாக பிரயோகிக்கப்படலாம்.)*

HM *2-3-2016 (ரூபா 98,215-12×2,700- ரூபா 130,615)*

**அடிப்படை சம்பளம்.-** ரூபா 77,827 + வாழ்க்கைப்படி ரூபா 7,800 மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்படும் ஏனைய படிகள்.

**தகைமைகள் :**

***புற ரீதியானவை (கீழே 1 அல்லது 2)***

1\. (அ) இணை உறுப்புரிமை வழங்கப்படுவதற்கு இலங்கை எந்திரவியலாளர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் சம்பந்தப்பட்டதொரு எந்திரவியல் துறையொன்றில் (மின்னணுவியல்/ தொலைத்தொடர்பாடல் அல்லது சம்பந்தப்பட்டதொரு துறையில்) நான்கு வருட முழு நேர விஞ்ஞான இளமானி பட்டப்பின்படிப்பு பட்டமொன்றினை பெற்றிருத்தல்;

அல்லது

(ஆ) இலங்கை எந்திரவியலாளர் நிறுவகத்தின் இணை உறுப்புரிமை தகைமையை விண்ணப்பதாரி பெற்றுக்கொள்வதற்குரிய வகையில் குறித்துரைக்கப்பட்ட எந்திரவியல் துறையில் இலங்கை எந்திரவியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் உள்ளடங்கியுள்ள சகல பகுதிகளும் பூரணமாக நிறைவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்;

அல்லது

(இ) ஒரு எந்திரி பட்டயம் என்ற தகுதியை பெற்றுக் கொள்வதற்கு தேவைப்படும் கல்வித் தகைமைகள் என ஐக்கிய இராச்சியத்தின் எந்திரவியல் மன்றத்தினால் பரிந்துரைப்பு செய்யப்பட்டமைக்கு அமைவுற சம்பந்தப்பட்ட எந்திரவியல் துறையில் ஐக்கிய இராச்சியத்தின் எந்திரவியல் மன்றத்தினால் அல்லது அதனோடிணைந்த நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையினது சகல பகுதிகளையும் பூரணமாக நிறைவுசெய்திருத்தலுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) இலங்கை எந்திரவியலாளர் நிறுவகத்தின் இணை உறுப்புரிமை தகைமையை விண்ணப்பதாரி பெற்றுக் கொள்வதற்குரிய வகையில் பட்டப்படிப்பிற்கான எந்திரவியல் பட்டத்தினை அல்லது எந்திரவியலில் இளவிஞ்ஞானமானி பட்டப்படிப்பு பட்டத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து அல்லது வேறு ஏனைய பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்;

அல்லது

(உ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் நான்கு வருட முழு நேர இளவிஞ்ஞானமானி பட்டப்படிப்பு பட்டமொன்றினை விஞ்ஞானத்தில் தொடர்புடைய துறையில் (பௌதிகவியல்/ வானியலாராய்ச்சி/ விண்வெளி விஞ்ஞானம்/ புவி புள்ளி விபரவியல்/எண்கணிதம் அல்லது சம்பந்தப்பட்டதொரு துறையில் பெற்றிருத்தல்;

மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சம்பந்தப்பட்டதொரு துறையில் பீ.எச்.டி பட்டத்தை பெற்றிருத்தல் அல்லது பட்டய எந்திரவியலாளராகவும் இலங்கை எந்திரவியலாளர் சங்கத்தின் இணையுரிமையாளராகவும் தொழில்சார்பியல் ரீதியில் பதிவு செய்யப்பட்டிருத்தல் (C Eng, FIESL) ;

மற்றும்

எந்திரி/ விஞ்ஞானி அல்லது அதற்கொப்பானதொரு பதவியில் ஆகக்குறைந்தது 20 வருட அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அதில் 05 வருடத்திற்கு குறையாத காலப்பகுதியானது சிரேட்ட முகாமைத்துவ மட்டமாகவும் அத்துடன் பல்துறை குழுக்களிற்கு தலைமைத்துவம் மற்றும் நெறிப்படுத்துகை செய்யக்கூடிய செயற்றிறன் உள்ளது என்பதனை நிரூபிக்க கூடியவராக இருத்தல் வேண்டும் என்பதோடு அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அங்கீகாரம் பெற்ற தனியார் நிறுவனங்களில் மனித மற்றும் ஏனைய வளங்களினை முறையாக பயன்படுத்தவும் மற்றும் வினைத்திறன் மிகுந்த முறையில் முகாமைத்துவம் செய்யக்கூடிய செயற்றிறனை கொண்டிருத்தல்.

2. (அ) இணை உறுப்புரிமை வழங்கப்படுவதற்கு இலங்கை எந்திரவியலாளர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் சம்பந்தப்பட்டதொரு எந்திரவியல் துறையொன்றில் (மின்னணுவியல்/ தொலைத்தொடர்பாடல் அல்லது சம்பந்தப்பட்டதொரு துறையில்) நான்கு வருட முழு நேர விஞ்ஞான இளமானி பட்டப்பின்படிப்பு பட்டமொன்றினை பெற்றிருத்தல்;

அல்லது

(ஆ) இலங்கை எந்திரவியலாளர் நிறுவகத்தின் இணை உறுப்புரிமை தகைமையை விண்ணப்பதாரி பெற்றுக்கொள்வதற்குரிய வகையில் குறித்துரைக்கப்பட்ட எந்திரவியல் துறையில் இலங்கை எந்திரவியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் உள்ளடங்கியுள்ள சகல பகுதிகளும் பூரணமாக நிறைவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்;

அல்லது

(இ) ஒரு எந்திரி பட்டயம் என்ற தகுதியை பெற்றுக் கொள்வதற்கு தேவைப்படும் கல்வித் தகைமைகள் என ஐக்கிய இராச்சியத்தின் எந்திரவியல் மன்றத்தினால் பரிந்துரைப்பு செய்யப்பட்டமைக்கு அமைவுற சம்பந்தப்பட்ட எந்திரவியல் துறையில் ஐக்கிய இராச்சியத்தின் எந்திரவியல் மன்றத்தினால் அல்லது அதனோடிணைந்த நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையினது சகல பகுதிகளையும் பூரணமாக நிறைவுசெய்திருத்தலுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) இலங்கை எந்திரவியலாளர் நிறுவகத்தின் இணை உறுப்புரிமை தகைமையை விண்ணப்பதாரி பெற்றுக்கொள்வதற்குரிய வகையில் பட்டப்படிப்பிற்கான எந்திரவியல் பட்டத்தினை அல்லது எந்திரவியலில் இளவிஞ்ஞானமானி பட்டப்படிப்பு பட்டத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து அல்லது வேறு ஏனைய பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்;

மற்றும்

பட்டய எந்திரி மற்றும் கூட்டுறவு உறுப்பினராக இலங்கை எந்திரவியலாளர் நிறுவகத்தில் தொழில்சார்பியல் ரீதியாக பதிவு செய்திருத்தல் (C Eng, FIESL) அல்லது ஐக்கிய இராச்சியத்தின் எந்திரவியல் நிறுவகமொன்றில் பட்டய எந்திரியாகவும் ஐக்கிய இராச்சியத்தின் தொழில் சார்பியல் எந்திரவியல் நிறுவகமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் கூட்டுறவு உறுப்பினராகவும் தொழில் சார்பியல் ரீதியாக தம்மை பதிவு செய்திருத்தல்;

மற்றும்

எந்திரி அல்லது அதற்கொப்பானதொரு பதவியில் ஆகக்குறைந்தது 20 வருட அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அதில் 10 வருடத்திற்கு குறையாத காலப்பகுதியானது சிரேட்ட முகாமைத்துவ மட்டமாகவும் அத்துடன் பல்துறை குழுக்களிற்கு தலைமைத்துவம் மற்றும் நெறிப்படுத்துகை செய்யக்கூடிய செயற்றிறன் உள்ளது என்பதனை நிரூபிக்க கூடியவராக இருத்தல் வேண்டும் என்பதோடு அரச திணைக்களங்கள், அரச

*கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அங்கீகாரமுடைய தனியார் நிறுவனங்களில் மனித மற்றும் ஏனைய வளங்களினை முறையாக பயன்படுத்தவும் மற்றும் வினைத்திறன் மிகுந்த முறையில் முகாமைத்துவம் செய்யக்கூடிய செயற்றிறனை கொண்டிருத்தல்.*

***குறிப்பு***.- *வியாபார முகாமைத்துவத்தில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் படிப்பு பட்டத்தை உடைய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

***அகரீதியிலானவை* :**

*நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆதர் சீ கிளாக் நிறுவகத்தில் சிரேட்ட முகாமையாளர் (NM 2-2) என்ற வகுதியில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் என்ற பதவியில் (தொழில்நுட்பவியல் செயற்பாடு/ திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி/ விண்வெளி தொழில்நுட்பம் மற்றும் பிரயோகம்) ஆகக் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவைகாலப்பகுதியினை கொண்டிருத்தல்.*

*மற்றும்*

*பல்துறை குழுக்களிற்கு தலைமைத்துவம் மற்றும் நெறிப்படுத்துகை செய்யக்கூடிய செயற்றிறன் உள்ளது என்பதனை நிரூபிக்க கூடிய விதத்தில் மனித மற்றும் ஏனைய வளங்களாவன முறையாக பயன்படுத்தல் மற்றும் அவற்றினை வினைத்திறன் மிகுந்த முறையில் முகாமைத்துவம் செய்தல் அனுபவம் இருத்தல் வேண்டும்.*

***குறிப்பு***.- *வியாபார முகாமைத்துவத்தில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் படிப்பு பட்டத்தை உடைய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

***வயது***.- *35 வயதிற்கு குறையாதவராகவும் 55 வயதை விட மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அக ரீதியிலான விண்ணப்பங்களை பொறுத்தவரையில் உயர் வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.*

***ஏனையவை* :**

*ஒவ்வொரு விண்ணப்பதாரியும்.-*

(i) *இலங்கைப் பிரசையாக வேண்டும்;*
(ii) *தனது பதவிக்குரிய கடமைகளை சிறப்பாக செய்வதற்கும் நாட்டின் எப்பாகத்திலும் சேவை ஆற்றுவதற்கும் ஏற்ற உடல் உள தகைமைகளை கொண்டவராக இருத்தல் வேண்டும்;*
(iii) *சிறந்த நன்னடத்தையினை உடையவராக இருத்தல் வேண்டும்.*

***ஏனைய நன்மைகள்* :**

*(அ) ஊழியர் சேமலாப நிதி.- தொழில் பெறுநர் 10%; நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆதர் சீ கிளாக் நிறுவகம் 15%;*
*(ஆ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் - நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆதர் சீ கிளாக் நிறுவகம் 3% ;*
*(இ) சம்பந்தப்பட்ட தொழில் சார்பியல் நிறுவனங்களில் உறுப்புரிமை கட்டணத்திற்கு ஏற்படக்கூடிய செலவினத்தை மீளளித்தல்;*
*(ஈ) ஒரு குறிப்பிட்ட வரையறைக்குட்பட்ட அளவில் அக மற்றும் வெளியக மருத்துவ பராமரிப்புகளுக்குரிய மருத்துவ திட்டம்;*
*(உ) அரச ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக அலுவலகத்திற்கு சொந்தமான வாகனமொன்றினை வழங்குதல்.*

*முடிவுத்திகதி : 2018.09.03.*

***விண்ணப்ப முறை*** .- *அரச திணைக்களங்கள்/ கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளினைச் சார்ந்த அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.*

சுயவிபரக் கோவை உள்ளடக்கப்பட்ட விண்ணப்பமானது இரத்த உறவு அற்ற இருவரின் பெயர் மற்றும் விலாசங்களை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்பட்டு கீழ்க் குறிப்பிடப்பட்ட விலாசத்திற்கு 2018.09.03 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக்கூடிய விதத்தில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பணிப்பாளர் நாயகம் பதவி - நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆதர் சீ கிளாக் நிறுவகம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

செயலாளர்,
விஞ்ஞான, தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி, திறன்
அபிவிருத்தி மற்றும் வாழ்க்கை தொழில்பயிற்சி
மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு,

விஞ்ஞான, தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி, திறன்
அபிவிருத்தி மற்றும் வாழ்க்கை தொழில்பயிற்சி
மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு,
3 ஆவது தளம்,
"செத்சிறிபாய", கட்டம் I,
பத்தரமுல்லை.

8-1165

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைதிறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2018

## First Efficiency Bar Examination for Women Development Officers of Ministry of Women and Child Affairs - 2018

01. மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைதிறன்காண் தடை தாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2018.09.21 ஆகும்.

02. **பரீட்சைப் பாடத்திட்டம்** :- இந்த வினைதிறன்காண் தடை தாண்டல் பரீட்சை பின்வரும் பாடங்களை உள்ளடக்கியிருக்கும். இந்தப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| | |
|---|---|
| பாட இலக்கம் 01 - நிதிப்பிரமாணம் மற்றும் அலுவலக நடைமுறைகள் | - காலம் 02 மணித்தியாலம்<br>புள்ளிகள் 100 |
| பாட இலக்கம் 02 - பால்நிலையும் பெண்ணுரிமைகளும் | - காலம் 02 மணித்தியாலம்<br>புள்ளிகள் 100 |
| பாட இலக்கம் 03 - சமூக விஞ்ஞானமும் உளவளத்துணையும் | - காலம் 02 மணித்தியாலம்<br>புள்ளிகள் 100 |

**குறிப்பு** :-

(அ) சகல பாடங்களுக்கும் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான பல அமர்வுகள் மூலம் உத்தியோகத்தரொருவருக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதி உண்டு;

(ஆ) சித்தியடைவதற்கு சகல வினாப்பத்திரங்களிலும் 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேல் பெற்றுக்கொள்ளல் வேண்டும்;

(இ) சகல வினாப்பத்திரங்களும் கட்டாயமாக விடையளிக்க வேண்டிய வினாக்களைக் கொண்டிருக்கும்.

03. **பாடங்கள்** :- கட்டமைக்கப்பட்ட மூன்று வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

03.01 நிதிப்பிரமாணம்/அலுவலக நடைமுறை
இலங்கையின் அரசாங்க முகாமைத்துவ கட்டமைப்பு
நிதிக் கட்டுப்பாடு மற்றும் வருடாந்த மதிப்பீடுகள்
தாபனவிதிக்கோவை விதிகள் மற்றும் நிதிப்பிரமானம்
தாபனவிதிக் கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்:
I, II, IV, V, VII, IX, XII, XV, XXIII, XXVI, XXVII, XXX, XXXI, XXXII, XXXIII
ஆகிய அத்தியாயங்கள், அரச நிதிப்பிரமாணத்தின் I ஆம் பகுதி (அத்தியாயம் X தவிர) அலுவலக முகாமைத்துவம்.

03.02 பால்நிலையும் பெண்ணுரிமைகளும்
பெண்களுக்கு எதிரான பாரபட்சம்
இலங்கை சமூகத்தில் பால்நிலை
இலங்கை பெண்கள் சாசனம் மற்றும் பெண்களது உரிமைகள்

03.03 சமூக விஞ்ஞானமும் உளவளத்துணையும்
கிராமிய சமூக விஞ்ஞானம்
இலங்கையின் நகரமயமாக்கல்
கிராம அபிவிருத்தி
உளவளத்துணையின் அடிப்படைப் பண்புகளும் ஒழுக்கங்களும்
பெண்ணும் உளவியல் முறைகேடுகளும்
இலங்கையின் உளவளத்துணை இயக்கமும் உளவளத்துணைக்கான சந்தர்ப்பங்களும்

04. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியின் தரப் பட்டுள்ளது. தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் ஏ 4 தாளில் தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன் இல. 01 தொடக்கம் 06 வரை முதல் பக்கத்திலும் மிகுதி அடுத்த பக்கத்திலும் அமைதல் வேண்டும். பரீட்சார்த்தி தனது கையெழுத்தினால் விண்ணப்பத்தை நிரப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை தயாரிக்கின்ற போது தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற போது விண்ணப்பதாரி வகிக்கும் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதாக அமைவதுடன், விண்ணப்பங்கள் அனுப்பிய பின்னர் அது தொடர்பாக நிகழும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு முரணான மற்றும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன்னர் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது பற்றியும் மற்றும் அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட்டு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்றும் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரம் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றி கவனத்தில் கொள்ளவும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றினை தம்வசம் வைத்துக்கொள்ளவும்.

05. விண்ணப்பப்படிவத்தினை தமது திணைக்களத் தலைவரின் ஊடாக (பிரதேச செயலகமாயின், பிரதேச செயலாளர் ஊடாக) 2018.09.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தினை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும். பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் பூ ரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச கரும மொழிக்கொள்கை தொடர்பான செயற்பாடுகளின் கீழ் புதிதாக உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை அரசகரும மொழியில் அல்லது சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட மொழி மூலத்திற்கேற்ப தமிழ் மொழியில்/ஆங்கில மொழியில் தயாரித்து சமர்ப்பிக்க முடியும்.

*06.* (i) *பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றிய அறிவித்தல் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 தினங்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அதில் குறிப்பிட்டவாறு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தம்வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் தொடர்பாயின், பரீட்சைக் கட்டணம் செலுத்திய ரசீதின் பிரதியினையும், தங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை மற்றும் பரீட்சையின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிட்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்து விசாரணை செய்யுமாறும், கொழும்புக்கு வெளியே வசிக்கும் அபேட்சகராயின், தங்களது மேற்குறிப்பிட்ட விபரங்கள் மற்றும் அனுமதி அட்டையின் பிரதியினை பக்ஸ் மூலமாக பெற்றுக்கொள்ளவதற்குரிய தங்களது பக்ஸ் இலக்கத்தினையும் குறிப்பிட்டு விண்ணபக்கடிதமொன்றை இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு பக்ஸ் மூலம் அனுப்புவது மிகவும் பயனுடையதாகும்.*

(ii) *அபேட்சகர் பரீட்சைக்குரிய அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்வதுடன் பரீட்சைக்குத் தோற்றுகின்ற அன்றைய தினமே பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையினை சமர்ப்பித்தல் வேண்டும்.*

(iii) *பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுள்ளவர் என்பதை ஏற்றுக்கொண்டதாக அமையமாட்டாது.*

*07.* ***ஆளடையாளம்*** *:- பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு வினாத்தாளின் போதும் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரிக்கு தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-*

(i) *தேசிய ஆள் அடையாள அட்டை;*
(ii) *செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;*
(iii) *செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.*

*மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் தோற்றுவதற்குரிய தகைமையை இரத்துச் செய்வதற்கோ அல்லது ஏற்காதிருப்பதற்கோ பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது.*

*08.* ***பரீட்சைக் கட்டணம்****:- பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படும்.*

***பரீட்சைக் கட்டணம்***

| | | ரூ. ச. |
|---|---|---|
| (அ) | முதலாவது தடவை பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டது | - |
| (ஆ) | முதலாவது தடவைக்குப் பின்னர் முழுப் பரீட்சைக்காகவும் | 500.00 |
| (இ) | ஒரு பாடத்திற்கு | 200.00 |

*பரீட்சைக் கட்டணங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினது 20-03-02-13 என்ற வருமானத் தலைப்பிற்கு வைப்புச் செய்யப்படுவதுடன் நாட்டின் எந்தவொரு தபால்/ உப தபால் நிலையங்களில் பணமாக செலுத்திப் பெற்றுக்கொண்ட ரசீதினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழன்றுவிடாதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்குப் பதிலாக காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணத்தைக்கொண்டும் மீண்டும் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையொன்றுக்கு மாற்றீடு செய்வதற்கோ முடியாது. பரீட்சைக்கட்டணம் செலுத்திய ரசீதின் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது பயனுடையதாகும்.*

*09.* (i) *இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன், அவரால் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பணிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அபேட்சகர் ஆளாக நேரிடும்.*

(ii) *பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுடைய பெறுபேறுகள் உள்ளடங்கிய அட்டவணை, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.*

*10. இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுள்ள மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்பட்டுள்ள தம்முடைய திணைக்கள/ அலுவலக உத்தியோகத்தர்களுக்கு திணைக்கள தலைவர்களினால் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக கடமை லீவு வழங்குதல் வேண்டும்.*

11. இந்த ஒழுங்குவிதிகளில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் இருக்குமிடத்து அது தொடர்பாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின் படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் அல்லது கருத்து மாறுபாடு காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

செயலாளர்,
மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு,
5 ஆம் மாடி,
செத்சிறிபாய 2 ஆம் கட்டம்,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2018**

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
1.2 இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியிலுமாக பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(உ-ம் : GUNAWARDHANA, H.M.S.K.)
1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :----.

02. 2.1 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
2.2 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலக் கெப்பிடல் எழுத்தில்) :----.
2.4 தொலைபேசி இலக்கம் :----.

03. 3.1 ஆண்/பெண் ஆண் - 0 பெண் - 1 ☐
(கட்டத்திற்குள் உரிய இலக்கத்தை இடவும்)
3.2 பிறந்த திகதி :
வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐
3.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் (2018.09.21) வயது :
வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள் : ☐☐

04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :- ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி (கடமையை பொறுப்பேற்ற தினத்தைக் குறிப்பிடுக) :----.

06. அரச கரும மொழிக்கொள்கை நோக்கங்களுக்கான பழைய உத்தியோகத்தரா அல்லது புதிய உத்தியோகத்தரா? :----.

07. திணைக்களத்தின் பெயர் (பிரதேச செயலகமாயின் அதன் பெயர்) :----.

08. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின் கீழ் தோற்றும் பாடங்கள் மற்றும் பாட இலக்கங்கள்:

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

09. பரீட்சைக்கு முதல் தடவையாக தோற்றுகின்றீரா? :----.

10. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் :-

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகம் :----.

(ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :----.

(iii) செலுத்திய தினம் :----.

| பற்றுச்சீட்டைக் கழராது இங்கே ஒட்டவும்.<br>(பற்றுசீட்டின் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்) |
|---|

10. மேலே குறிப்பிட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரிமையுள்ளது என்பதை குறிப்பிடுகின்றேன். மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்துவது தொடர்பாக விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் கட்டுப்படுவேன் என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- விண்ணப்பதாரி தனது திணைக்களத் தலைவரின் அல்லது திணைக்களத் தலைவருக்கு பதிலாக ஒப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரொருவரின் முன்னிலையில் கையொப்பமிடுதல் வேண்டும்.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தரான ................ என்பவரை தனிப்பட்ட ரீதியில் நான் அறிவேன் என்றும் ................ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

பெயர் :-----.

பதவி :-----.

முகவரி :-----.

**திணைக்களத் தலைவரின் சிபாரிசு**

மேலே தரப்பட்டுள்ள விடயங்கள் பரிசீலிக்கப்பட்டவை என்றும் அவை சரியானவை என்றும் உரிய பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்டு அதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் /விண்ணப்பதாரி முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றார் என்றும் பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பொருத்தமானவர் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்).

பெயர் :-----.

பதவிப் பெயர் :-----.

முகவரி :-----.

திகதி : -----.

(தேவையற்ற சொற்களை வெட்டி விடவும்.)

*8-1196*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.